**செ.வெ. எண்: 551** **நாள்: 08.09.2011**

**<u>மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.சி.சண்முகவேலு அவர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு கழகத்திற்கு நவீன பயிற்சி வளாகம் அமைக்க இடம் தேர்வு செய்வதற்கான ஆய்வு</u>**

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு கழகத்தினை ஆற்றல் மிக்க நிறுவனமாக மாற்ற 4.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளும் கூடிய வகுப்பறைகள், நூலகம், கணிணி மையம், கூட்ட அரங்கம் மற்றும் தங்கும் விடுதி ஆகிய வசதிகளுடன் கூடிய ஓர் நவீன பயிற்சி வளாகத்தை அமைக்க நிதி நிலை அறிக்கையில் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி தொழில் முனைவோர் மேம்பாட்டு கழகத்திற்கான நவீன பயிற்சி வளாகம் அமைக்க கிண்டி சிட்கோ, திரு.வி.க. தொழிற்பேட்டையில் இரண்டு இடங்களை மாண்புமிகு அமைச்சர் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.சி.சண்முகவேலு அவர்கள் இன்று (7.9.2011) பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.டி.எஸ்.ஸ்ரீதர், இ.ஆ.ப., தொழில் முனைவோர் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் திரு.ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தொழில் வணிக ஆணையர் திரு.விபு நாயர், இ.ஆ.ப., சிட்கோ மேலாண்மை இயக்குநர் திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப., ஆகியோர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**